# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2023 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, இலங்கை வரிவிதிப்பு நிறுவகம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டம்*

---

[*2023 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 21 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது*]

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2023, ஓகத்து மாதம் 25 ஆந் திகதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா 18.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

***2023 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, இலங்கை வரிவிதிப்பு நிறுவகம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டம்***

*[2023 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 21 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]*

*ச.வ.ஓ. (கூட்.) 21/2022*

***2000 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை வரிவிதிப்பு நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டத்தைத் திருத்துவதற்கான தொரு சட்டம்***

*முன்னுரை*

*2000 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை வரிவிதிப்பு (கூட்டிணைத்தல்) இலங்கை வரிவிதிப்பு நிறுவக சட்டத்தினால் கூட்டிணைக்கப்பட்டுள்ளதாதலாலும் :*

*அத்துடன், இலங்கை வரிவிதிப்பு நிறுவகமானது அதனுடைய பெயரை மாற்றுவதற்கு விரும்புகின்றதாதலாலும் சொல்லப்பட்ட கூட்டிணைத்தலின் குறிக்கோள்களை மேலும் பயனுற கொண்டு நடாத்தும் நோக்கத்திற்காக மேற்சொல்லப்பட்ட சட்டத்திற்கு குறித்த சில திருத்தங்கள் ஆக்கப்பட்டுள்ளதாதலாலும்:*

*அத்துடன், இலங்கை வரிவிதிப்பு நிறுவகமானது மேற்சொல்லப்பட்ட சட்டத்திற்கு ஆக்கப்பட்டுள்ள திருத்தங்களை விண்ணப்பித்துள்ளதா தலாலும் சொல்லப்பட்ட விண்ணப்பத்தை அனுமதிப்பது பொதுமக்கள் நன்மைக்கானதாவிருக்குமாதலாலும்,*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-*

*சுருக்கப் பெயர்*

*1. இச்சட்டம், 2023 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, இலங்கை வரிவிதிப்பு நிறுவகம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.*

*2000 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்கச் சட்டத்திற்கான பொதுவான திருத்தம்*

*2. இலங்கை வரிவிதிப்பு நிறுவகச் சட்டத்தில் (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஏதேனும் விதியில், அறிவித்தலில் அல்லது வேறு ஆவணத்தில் 2000 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை வரிவிதிப்பு நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டத்தில் இலங்கை வரிவிதிப்பு நிறுவகம் எனக் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், சொல்லமைப்பு வேறுவகையில் தேவைப்படுத்தினாலொழிய, "இலங்கை*

வரிவிதிப்பு நிறுவகம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இலங்கை வரிவிதிப்பு பட்டய நிறுவகம்" என்னும் சொற்கள் இடப்படுதல் வேண்டும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்*

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 என்னும் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் பந்தி (உ) இனை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:

"(உஅ) சட்டத்தின் 8 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கிணங்க கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களின் நன்மைக்காக நலன்புரி திட்டத்தை வகுத்தமைத்தல்."; அத்துடன்

(2) அப்பிரிவின் (ச) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:

"(ச) கூட்டுத்தாபனத்தின் அலுவல்களையும் சேவையாளர்களையும் நியமித்தலும், தொழிலுக்கமர்த்துதலும், பதவி நீக்குதலும் அல்லது அவர்களின் சேவைகளை முடிவுறுத்தலும், அவர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தலும் மற்றும் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கிணங்க அத்தகைய சம்பளங்களையும், படிகளையும், பணிக்கொடைகளையும் அவர்களுக்குச் செலுத்துதலும்;".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்*

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 என்னும் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவில் (ஆ) என்னும் பந்தியில், "சமர்ப்பிக்கும் ஆளொருவர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "சமர்ப்பிக்கும் ஆளொருவர்; அல்லது"; என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியினைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(இ) சட்டத்தின் 8 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளினால் குறித்துரைக்கப்படக்கூடிய வாறான நிதி அல்லது வரிவிதிப்பு துறையில் ஏதேனும் வேறு தகைமையைக் கொண்டுள்ள ஆளொருவர்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுட்பிரிவின் பந்தி (அ) இனை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:-

"(அ) சட்ட ஏற்பாடுகளின்கீழ் உறுப்பாண்மையை வகுப்பாக்கம் செய்தலும், உறுப்பினர் களைச் சேர்த்தலும், அவர்கள் விலகுதலும், அவர்களை விலக்குதலும் அல்லது அவர்கள் பதவி நீங்குதலும் மற்றும் கூட்டுத் தாபனத்தினால் வழங்கப்பட்ட ஒவ்வொரு வகுப்பு உறுப்பினர்களால் செலுத்தப்படற் பாலதான கட்டணங்கள் அல்லது தகைமை காண் பரீட்சைகள் அல்லது அங்கீகரிக்கப் பட்ட கற்கைநெறிகள் அல்லது வேறு எவையேனும் சேவைகள்";

(2) அவ் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில், "நியமனமும்" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "நியமனத்தின் நியதிகளும் நிபந்தனைகளும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(3) அப்பிரிவின் பந்தி (ஈ) இனை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(ஈஅ) பேரவை மற்றும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினராகவிருப்பதற்கான தகைமைகள் மற்றும் தகைமையீனங்கள்;".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்*

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகிறது:-

*"பெயர்களின் பின்னால் எழுத்துக்களை அல்லது பட்டங்களைப் பயன்படுத்துதல்*

9. கூட்டுத்தாபனத்தின் எவரேனும் உறுப்பினரொருவர் -

(அ) இணை உறுப்பினராக இருக்குமிடத்து, அவர், அவரின் பெயரின் பின்னால் எப்.சி.ஐ.ரி. என்னும் எழுத்துக்களை பயன்படுத்தும் உரித்துடையவராதல் வேண்டும்;

(ஆ) கூட்டுறுப்பினரொருவராக இருக்குமிடத்து, அவரின் பெயரின் பின்னால் ஏ.சி.ஐ.ரி. என்னும் எழுத்துக்களைப் பயன்படுத்தும் உரித்துடையவராதல் வேண்டும்;

(இ) கௌரவ இணை உறுப்பினரொருவராக இருக்குமிடத்து, அவர், அவரின் பெயரின் பின்னால் கௌரவ எப்.சி.ஐ.ரி. என்னும் பட்டத்தைப் பயன்படுத்தும் உரித்துடையவராதல் வேண்டும்; அல்லது

(ஈ) கௌரவ கூட்டுறுப்பினரொருவராக இருக்குமிடத்து, அவர், அவரின் பெயரின் பின்னால் கௌரவ ஏ.சி.ஐ.ரி. என்னும் பட்டத்தைப் பயன்படுத்தும் உரித்துடையவராதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**7.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவானது, "தமது பெயரின் பின்னர் எப்.ரி.ஐ.ஐ. (இலங்கை) அல்லது கௌரவ ஏ.ரி.ஐ.ஐ. (இலங்கை)" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தனது பெயரின் பின்னர் எப்.சி.ஐ.ரி., ஏ.சி.ஐ.ரி., கௌரவ எப்.சி.ஐ.ரி. அல்லது கௌரவ ஏ.சி.ஐ.ரி." என்னும் சொற்களை இடுவதன் மூலம் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 13அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்*

**8.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன் முதன்மைச் சட்டவாக்கத்தின் 13அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

*"பேரவையின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் அலுவலர்கள் மற்றும் வேறு சேவையாளர்கள் நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட செயல்களுக்கு பொறுப்பாதலாகாது*

13அ. பேரவையின் உறுப்பினர்கள், கூட்டுத்தாபனத்தின் அலுவலர்கள் மற்றும் சேவையாளர்கள் இச்சட்டத்தின்கீழ் அதனது அல்லது அவர்களது தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகித்தல், புரிதல் அல்லது நிறைவேற்றுதலின் போது நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட அல்லது ஏதேனும் செய்யாமைக்காகப் பொறுப் பாதலாகாது. ஆயின், அத்தகைய விடுபாட்டுரிமை பின்வருவன வற்றுக்கு நீடித்தலாகாது-

(அ) அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழான குற்றவியல் தவறுக்கான பொறுப்பு;

(ஆ) இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் ஏற்புடையதான எழுத்திலான சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கு முரணாக செய்யப்பட்ட ஏதேனும் செயல்.".

*ஒப்பந்தங்கள் மற்றும் ஏனைய வைக்கான பேணல்*

**9**. (1) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர் செய்யப்பட்ட, வழங்கப்பட்ட அல்லது எழுதி நிறைவேற்றப்பட்ட எத்தகையனவுமான ஒவ்வொரு ஒப்பந்தமும், உடன்படிக்கையும் அல்லது வேறு சாசனமும் அல்லது ஆவணமும், இலங்கை வரிவிதிப்பு நிறுவகத்தினால் அல்லது அதன் சார்பில் அத்தேதியில் இருக்கின்றதுமான இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும் இலங்கை பட்டய வரிவிதிப்பு நிறுவகத்தினால் அல்லது அதன் சார்பில் செய்யப்படுகின்றனவாகவும், வழங்கப்படுகின்றனவாகவும் அல்லது நிறைவேற்றப்படுகின்றனவாகவும் கருதப்படுதல் வேண்டும்.

(2) இலங்கை வரிவிதிப்பு நிறுவகத்தினால் அல்லது அதற்கெதிராகத் தொடுக்கப்பட்டவையும், இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று முடிவுறாதுள்ளவையுமான எல்லாத் துடர்ச்சிகளும், வழக்குகளும், மேன்முறையீடுகளும் மற்றும் வேறு சட்ட நடவடிக்கைகளும் தணிந்து போதலோ அல்லது நிறுத்தப்படுதலோ ஆகாதென்பதுடன், இலங்கை பட்டய வரிவிதிப்பு நிறுவகத்தினால் அல்லது அதற்கெதிராகத் தொடர்ந்து நடாத்தவும் படலாம் அல்லது வலுவுறுத்தவும்படலாம்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**10**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*